Registered as a Newspaper in Ceylon

# ஈழநாடு

EELA NADU

| ஈழநாடு சந்தா விபரம் | | |
| --- | --- | --- |
| இந்தியா — இலங்கை | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
| 1 வருடம் | 48-00 | 1 -00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி எண்: 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி சித்திரை 18 ஆம் நாள் துல்ஹஜ் 17 ( 0-4-64 வியாழக்கிழமை இதழ் 79

### கோடீஸ்வரன் வழக்கு

# அட்டோர்ணி ஜெனரல் ஆலோசனை கோரப்படும்

## அதன்பின்னரே நடவடிக்கை எடுப்பதென மந்திரிசபை முடிவு

கொழும்பு, புதன்

**கோடீஸ்வரன் வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பு குறித்து அட்டோர்ணி ஜெனரலுடன் ஆலோசனை செய்து அவர் எவ்வித அபிப்பிராயம் தெரிவிக்கிறார் என்பதைக் கொண்டே மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதென மந்திரிசபை முடிவு செய்துள்ளது.**

இன்று நடைபெற்ற மந்திரி சபைக் கூட்டத்தில், கோடீஸ்வரன் மொழிவழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்புக் குறித்து பலமாக விவாதம் நடைபெற்றதாக அறியப்படுகிறது.

உத்தியோக மொழிச் சட்டத்தை வெகுவேகத்துடனும், எதுவித தடையுமின்றி அமுல் செய்வதற்கு அரசாங்கசேவை நிதிச் சட்டத்தை திருத்தி அமைக்க வேண்டுமென்ற நீதி மந்திரி திரு. ஜி. வி. பி.ஏ. டி' சில்வாவின் மகஜர் பற்றி சபையில் விவாதிக்கப்பட்டது. கோடீஸ்வரன்வழக்கின் தீர்ப்பு பற்றி எந்தவித நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதுபற்றி அட்டோர்ணி ஜெனரலின் ஆலோசனை எவ்விதம் அமைகின்றது என்பதைப் பொறுத்து அதன் பின்னரே அரசாங்க சேவை நிதிச்சட்டத்தை திருத்துவதுபற்றி ஆலோசிப்பதென பிரதமர் தெரிவித்தார்.

பெட்ரோலிய:

## தொழிலாளர் இன்று வேலைக்கு திரும்புவர்

### சமரச உடன்பாடு ஏற்பட்டது

கொழும்பு, புதன்

**சென்ற திங்கட்கிழமை கொழும்பில் ஆரம்பிக்கப்பட்ட பெட்ரோலியம் கார்ப்பரேஷன் தொழிலாளரின் வேலைநிறுத்தம் கைவிடப்பட்டதாக இன்று இரவு அறிவிக்கப்பட்டது.**

பெட்ரோலியம் கார்ப்பரேஷனுக்கும் தொழிலாளர்களுக்குமிடையே ஏற்பட்ட சமரச உடன்பாட்டின் பிரகாரமே தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் கைவிடப்பட்டதாக அறியப்படுகிறது.

தொழிலாளர்கள் நாளை வழமைபோல் வேலைக்குத் திரும்புவரெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நகர மண்டபத்தில் நடைபெறும் முக்கிய கூட்டம்

### கோடீஸ்வரன் கலந்துகொள்வார்

யாழ்ப்பாணம், வியாழன்

உள்ளூராட்சி ஸ்தாபனங்களில் கடமையாற்றும் சகல தமிழ் ஊழியர்களையும் ஒரு ஸ்தாபன அணியின் கீழ் கொண்டுவரும் பொருட்டு இன்று யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் கூட்டமொன்று நடைபெறும். இன்று பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும் இக்கூட்டத்தில் மொழி வழக்கில் வெற்றிபெற்ற திரு. செல்லையா கோடீஸ்வரன் கலந்துகொள்வார்.

அரசாங்க ஊழியரான திரு. செல்லையான கோடீஸ்வரன் மொழிவழக்கில் வெற்றி பெற்றதன் மூலம் அரசாங்க ஊழியர்கள் காட்டிய முன்மாதிரியை ஸ்தல ஸ்தாபனங்களைச் சேர்ந்த ஊழியர்கள் கடைப்பிடிக்கவேண்டுமென்றும் அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்ற வேண்டுமென்றும் இக்கூட்டத்தில் கோரப்படுமென்று கூறப்படுகிறது.

இன்று நடைபெறும் இக்கூட்டத்தில் பல முக்கிய முடிவுகள் வெளியாகும்.

---

## தாதி துணையாள் பதவி இனி இல்லை

நல்லூர், வியாழன்

கடந்தவருடம் ஜூன் மாதம் நடைபெற்ற தாதி துணையாள் மாணவிகள் பரீட்சை ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக சுகாதாரப்பகுதி அறிவித்துள்ளது. தாதித்துணையாட்களை நிறுத்திவிட அரசாங்கம் முடிவுசெய்திருப்பதே இதற்குக் காரணமாகும்.

தாதித்துணையாட்களை நிறுத்திவிடத் தீர்மானிக்கப்பட்டிருப்பதால் தாதித்துணையாளமாணவிகளைத் தேர்ந்தெடுப்பதற்காக கடந்த வருடம் ஜூன்

(2-ம் பக்கம் பார்க்க)

## நேரு–ஷேக் சந்திப்பு

புதுடில்லி, ஏப்ரல் 29

சமீபத்தில் விடுதலை செய்யப்பட்ட காஷ்மீரின் முன்னாள் பிரதமர் திரு. ஷேக் அப்துல்லா இன்று புதுடில்லியில் பிரதமர் நேருவைச் சந்தித்தார். புதுடில்லியில் விருந்தினராகத் தங்கியிருக்கும் திரு. ஷேக் அப்துல்லா பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் நல்லெண்ணம் நாடி தாம் வந்திருப்பதாகத் தெரிவித்தார்.

## கூட்டரசாங்கம்; மந்திரிசபை ஆராயவில்லை!

கொழும்பு, புதன்

இன்றுகூடிய மந்திரிசபையில் சுதந்திரக்கட்சி, இடதுசாரி முன்னணியுடன் கூட்டுசேர்வது பற்றி எதுவும் ஆராயபடவில்லை. இன்று கூடும் மந்திரிசபையில்கூட்டுஅரசாங்கம்பற்றி ஆராயப்படும் என அரசியல் வட்டாரங்கள் எதிர்பார்த்திருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

## யோகர் சுவாமியின் ஞாபகார்த்த தினம்

யாழ்ப்பாணம், வியாழன்

யோகர்சுவாமி அவர்களின் ஆத்மா சாந்தியடைந்த 40-ம் நாளை நினைவுபடுத்தும் வகையில் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கொழும்புத்துறை ஆச்சிரமத்தில் அபிஷேகமும், 12 மணிக்கு மகேசுர பூசையும் நடைபெறும். அடியார்களெல்லோரும் இதில் கலந்து கொள்ளுமாறு ஆச்சிரமநிர்வாகி திரு. ச. திருநாவுக்கரசு வேண்டுகோள விடுத்துள்ளார்.

## நாய்க்கு அருகில் கை, கால் அற்ற குழந்தையின் சடலம்!

யாழ்ப்பாணம், வியாழன்

அடையாளங் காணப்படாத, கைகளும் கால்களும் அற்ற நிலையில் குட்டி ஈன்றுள்ள ஒரு நாய்க்குப் பக்கத்தில் இறந்த குழந்தையொன்றின் சடலம் சுதுமலையிலுள்ள கோணவளைபல், பொன்னையா பெண்சின்னம்மாவின் வளவில் காணப்பட்டது.

இக்குழந்தையின் மரணம் பற்றி யாழ்ப்பாணம் மரண விசாரணை அதிகாரி திரு எஸ். கனகரத்தினம் விசாரணை நடத்தினர்.

இக்குழந்தை பூரணமான பிள்ளையாக இறந்த பின்பே பிறந்ததென்று சட்டவைத்திய அதிகாரி அபிப்பிராயம் தெரிவித்ததன்மேல், குழந்தையின் பிறப்பு பற்றி மறைத்த தாயைக் கண்டுபிடிக்குமாறு திரு. கனகரத்தினம் பொலிசாருக்குக் கட்டளையிட்டார். குழந்தையை நாய் தூக்கிக் கொண்டுவந்து அதன் கால் கால்களைத் தின்றிருக்கவேண்டுமெனவும் சட்டவைத்திய அதிகாரி அபிப்பிராயம் தெரிவித்துள்ளார்.

புகையிலை – மிளகாய் – கத்தரி – முந்திரிகை முதலிய பயிர்களில் உண்டாகும்
சுருணைகளையும் புழுக்களையும் அழிப்பதற்கு

BAYER

பொலிடோலுடன்—மெற்றசிஸ்ரொக்ஸ்

FOLIDOL METASYSTOX

கலந்து நாற்று மேடையில் இருந்து பாவிக்கத் தொடங்கவும்

PHONE 397 JAFFNA ROYAL DISPENSARY T'GRAMS ROYAEL

### மணிவாக்கு

அன்பென்பது ஒருபோதும் சயநலமற்றது, ஆத்திரமற்றது, வெறுப்பற்றது. நல்லதை எப்போதும் நம்ப ஆவலுடன் இருக்கும். எப்போதும் நம்பிக்கையும் பொறுமையுமுள்ளது. அன்பு என்றும் மறையாதது.

—கொரின்தியன்ஸ்.


# ஈழநாடு

EELA NADU

EELA NADU National Tamil Dail, Post Box 49, Jaffna
Telegram. EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு சித்திரை ௴ 18 (30-4-64)


## நீதிமந்திரியின் யோசனை

இலங்கையில் உத்தியோக மொழிச் சட்டத்தை "சுமுகமாகவும் விரைவாகவும் அமுல் நடத்துவதற்கு" நிதி, அரசாங்க சேவை சட்டப்பிரமாணங்களை உடனடியாகத் திருத்தவேண்டும் என்று நீதிமந்திரி அரசாங்கத்துக்குச் சிபார்சுசெய்திருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது. இதன் விபரங்கள் தெரியவில்லை.

உத்தியோகமொழிச் சட்டம் 1956-ம் ஆண்டில் கொண்டுவரப்பட்டபோதிலும் இதுவரை அதை வெற்றிகரமாக அமுல் நடத்தமுடியவில்லை. மொழிப் பிரச்னை தீர்ந்துபோன விஷயமென்றும் சிங்களத்திலேயே நாட்டின் நிர்வாகம் நடைபெறுமென்றும் மந்திரிகளும் அரசியல் தலைவர்கள் சிலரும் அடிக்கடி வீராப்புப்பேசி வந்திருக்கின்றனர். இந்தப்பேச்சு அர்த்தமற்றதென்பதையும் உத்தியோகமொழிச்சட்டத்தை இன்னமும் சீராகவும் விரைவாகவும் அமுல்நடத்தமுடியாமலுள்ளதென்பதையும் நீதிமந்திரியின் இச்சிபார்சு ஒப்புக்கொள்ளுவதாகின்றது.

நிதி, அரசாங்கசேவை சட்டவிதிகளைத் திருத்தினால் உத்தியோகமொழிச் சட்ட அமுலைச் சுமுகமாகவும் விரைவாகவும் செய்துமுடிக்கலாமென நீதிமந்திரி தெரிவித்திருப்பதுதான் வேடிக்கையாக இருக்கிறது. உத்தியோகமொழிச் சட்டம் வந்தகாலம் தொடக்கம் இதுவரை அது செய்த தீமைகளையெல்லாம் நீதிமந்திரி சற்றே எண்ணிப்பார்த்திருந்தால் இத்தகைய சிபார்சைத் தெரிவித்திருக்கமாட்டார். நாட்டிலுள்ள சகல மக்களும் ஐக்கியமாக வாழ்ந்தாலே நாடு முன்னேற முடியுமென்பதை பிரதமரும் மந்திரிகள் சிலரும் பேச்சளவிலாவது கூறிவருவதை அறிந்தபின்னரும் இந்த ஐக்கியதுக்குத் தடையாக இருப்பது மொழிச்சட்டம்தான் என்பதை நீதிமந்திரி உணர்ந்துகொள்ளாதது விந்தையே! அனுபவமும் திறமையுமுள்ள அரசாங்க ஊழியர்கள் சிங்களம் தெரியாத ஒரேயொரு காரணத்துக்காக வேலையிலிருந்து நீக்கப்படுவதும் இதனால் நிர்வாகவேலைகள் ஸ்தம்பித்துள்ளதும் மந்திரிக்குத் தெரியாதா?

"இருபத்துநான்கு மணி நேரத்துக்குள் சிங்களத்தை உத்தியோகமொழியாக்குவேன்" என்று கூறிய முன்னாள் பிரதமர், தமிழ்பேசும் மக்களின் ஒத்துழைப்பும் உதவியும் இன்றி நாட்டை நிர்வகிக்க முடியாது என்பதை உணர்ந்து தமிழ் மொழி (விசேஷ ஷரத்துக்கள்) மசோதாவைக் கொண்டுவந்து நிறைவேற்றினரென்பதையும் நீதிமந்திரி மறந்துவிட்டார் போலும். உத்தியோகமொழிச் சட்டத்தை அமுல்நடத்துவதற்கு இடையூறாக இருக்கும் அடிப்படைக் காரணங்களை விரிந்த மனதுடன் நன்கு அலசி ஆராய வேண்டும். ஒரு சில சட்டவிதிகளைத் திருத்துவதன் மூலம் உத்தியோக மொழிச் சட்டத்தை அமுல் நடத்தி விடலாமென நீதிமந்திரி கருதுவாரானால் அது பெருந்தவறு.

நாடு சுதந்திரமடைந்து பதினைந்து வருடங்களுக்கு மேலாகிவிட்டது. இன்னும் எதுவித முன்னேற்றத்தையும் காணோம். இதற்குமாறாக பின்னோக்கிச் செல்கின்றது. உத்தியோக மொழிச் சட்டம் கொண்டுவந்து எட்டு ஆண்டுகளாகியும் அதைச் சரிவர அமுல் நடத்த முடியாமலுள்ளது, நாட்டில் வேற்றுமையையும் குழப்பத்தையும் உண்டாக்கி பொருளாதார நிலையை மோசமாக்கியதுடன் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் வாழ்க்கைச் செலவு உயர்வையும் ஏற்படுத்தியதைத் தவிர உத்தியோக மொழிச் சட்டம் வேறெதையும் செய்யவில்லை. நிலைமை இவ்வாறிருக்கையில் சட்டவிதிகளைத் திருத்த வேண்டுமென்று நீதிமந்திரியும், இடது சாரிகளின் உதவியைப் பெறுவதுதான் ஒரேமார்க்கமெனவும் மற்றும் சில மந்திரிகளும் கருதுகின்றனர். கூட்டு மந்திரிசபையாலே, விதிகளைத் திருத்துவதனாலோ நாட்டின் இன்றைய நிலையை சீர் திருத்தி அமைத்து விட முடியாது.

மொழிச் சட்டத்தினால், இந்த நாட்டின் இரண்டாவது பெரிய சமூகமான தமிழ் பேசும் மக்களுக்கு இழைத்த தீமைகளை அகற்றி அவர்களது உரிமைகளை வழங்கி அவர்களின் உதவியையும் ஒத்துழைப்பையும் பெற்றால்தான் நாட்டில் அமைதி ஏற்படும்; நாடும் முன்னேறும். அப்படியின்றி நீதி மந்திரி சில சட்டவிதிகளைத் திருத்துவது. கடப்பாறை விழுங்கியவனுக்குச் சுக்குக் கஷாயம் கொடுப்பது போலாகும். பிரதம மந்திரி இதை உணர்ந்து துணிச்சலுடன் தக்க நடவடிக்கை எடுப்பாரா?

## வாசிகசாலை திறப்புவிழா

காங்கேசன்துறை, புதன்

காங்கேசன்துறை பட்டின சபை பொதுமக்களுக்கெனப் பட்டினசபை அலுவலகத்திற்கு முன் நிறுவப்பட்ட நூல்நிலையத்தைப் பட்டினசபைத் தலைவர் திரு. மு. திடவீரசிங்கம் திறந்துவைத்தார்.

மேற்படி வாசிகசாலையைத் திறந்துவைத்து அவர் பேசுகையில், பொதுமக்கள் இந்த வாசிகசாலையை மற்றவர்களுக்கு இடைஞ்சல்கொடுக்காது பாவிக்கும்படி கேட்டுக்கொண்டார்.

முதலாம் வட்டார அங்கத்தவர் திரு. சு. கிருபாமூர்த்தியும் உரைநிகழ்த்தினர்.

# "தமிழினத்தின் விடுதலைக்கு பொருளாதாரவிருத்தி தேவை"

உடுவில், புதன்

"தீண்டாமை ஒழிப்புடன் மாத்திரம் நின்றுவிடாது பொருளாதார அபிவிருத்தியிலும் நாம் கூடிய கவனம் எடுக்கவேண்டும். தமிழினத்தின் இன்றைய திருப்திக்கேற்ப இணைந்தோடினால் தான், நாம் கோரும் சமத்துவம் பூரணத்துவம் அடையும்" என்று மக்கள் முன்னேற்ற மன்ற உடுவில் கிளைத் தலைவர் திரு. மாரிமுத்து அண்மையில் நடைபெற்ற அதன் நிர்வாக சபைக் கூட்டமொன்றில் பேசுகையில் கூறினர்.

மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையில் நடைபெற்ற இக் கூட்ட ஆரம்பத்தில் புரட்சிக்கவிஞர் பாரதிதாசனின் மறைவுக்கு அஞ்சலி தெரிவிக்கபபட்டது.

காணிக் கச்சேரிகளில் தவருது பங்கெடுக்கச் சமூக மக்களை ஊக்குதல். அது சம்சந்தமாக அதிகாரிகளோடு தொடர்புகொண்டு ஆவன செய்தல்; கூட்டுறவுச் சங்கங்கள், விற்பனவுக் கடைகளைச் சாத்தியமான இடங்களில் உடனடியாக ஆகுவித்தல்; வெங்காயக் கூடை பின்னல்; மாடு, கோழி வளர்த்தல்; நெசவு இவற்றைக் கூட்டு முறையில் ஆரம்பித்தல் என்று இக் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டன.

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயப்பிரவேசம் பற்றிய பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து நடத்தி விரைவில் சமாதான முறையில் ஆலயப்பிரவேசத்தை நடத்துவிப்பதற்கு ஐவர் கொண்ட உபகுழு ஒன்றும் நியமிக்கப்பட்டது. கிளையின் மூன்றாவது ஆண்டு விழாவை ஜூலை மாதத்தில் நடத்தவும் முடிவுசெய்யப்பட்டது.

# சதிவழக்கு விசாரணையில் 5 எதிரிகள் சமுகமளிக்கவில்லை

கொழும்பு, புதன்

நேற்றுக்காலை நடைபெற்ற புரட்சி சதிவழக்கு விசாரணையின் போது முதலாவது எதிரி திரு. டக்ளஸ் லியனேகே, எட்டாவது எதிரி மேயர் ஐ. பி. லோயலா, பத்தொன்பதாவது எதிரி திரு. ரெரி விஜயசிங்கா, இருபதாவது எதிரி திரு. லயனல் ஜயசிங்கா, இருபத்து மூன்றாவது எதிரி திரு. எல். ஜி. ஜாக்ஸன் ஆகியோர் சமூகமளிக்கவில்லை.

நீதியரசர்கள் சான்சோனி, எச். என். ஜி. பெர்னாண்டோ, எல். பி. டி. சில்வா ஆகியோர் முன்னிலையில் புரட்சிசதி வழக்கு நேற்று காலை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளபபட்டபோது கப்டன் சி. எச். வனசிங்கி, எதிரிகளின் வழக்கறிஞரான திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

குறுக்கு விசாரணையின் போது வனசிங்கி கூறியதாவது: எனது பிரிவைச் சேர்ந்த சிலரை துறைமுகத்தில் வேலை செய்யும்படி உத்தரவு பிறபிக்கப்பட்டிருந்தது ஆனால் அந்த செய்தி ஜனவரி 27-ம் திகதியா அல்லது 28 ம் திகதியா துறைமுகத்தில் வேலைசெய்வதென்று தெளிவுபடுத்தவில்லை. இந்த வேலைகளுக்கு பொறுபபாக ஓர் அதிகாரி நிறுத்சப்பட்டிருந்தார். இரவு 11-40 மணிக்கு நான் டெலிபோன் செய்தபின் ஏப்ரகாம் வந்தார். அங்கு வருமுன் ஏப்ரகாம், மேஜர் ஜெனரல் விஜயக்கோனுடன் தொடர்பு வைத்தாரா என்பதுபற்றி எனக்குத் தெரியாது. அவர் வருவதற்குமுன் விஜயக்கோனுடன் தொடர்பு வைத்தார் என்று கருதினால் அவர் 12-15 மணிக்கு வந்தது சரியாயிருக்கும்.

திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவிற்கு முன்னிலையில் நான் சாட்சியமளிக்கும்போது, திடீரென ஒலிபரப்புக் கருவி வேலைசெய்தது எனக்கு ஞாபகமிருக்கிறது உத்தரவுகள் உயர் அதிகாரிகளிடமிருந்து வரவில்லையென்று அவரிடம் தெரிவித்தேன். உண்மையைக் கூறுவிடில் என்னையும் சந்தேக நபராகப் பாவிப்பாரென அவர் என்னிடம் கூறினர். அந்தநேரத்தில் காப்டன் அங்கியும், வீரசிங்காவும் கைதுசெய்யப்படவில்லை.

## யூ. என். பி. வெற்றி

பெந்தோட்ட, புதன்

வண்டுறம்ப கிராமசபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி ஆறு வட்டாரங்களைக் கைப்பற்றிகொண்டது. பத்து வட்டாரங்களைக்கொண்ட இக் கிராமசபையில் ஐக்கிய இடது சாரி முன்னணி மூன்று இடங்களைப்பெற்றது. சுயேச்சையாகப் போட்டியிட்ட ஒருவரும் வெற்றியீட்டியுள்ளார்.

## ஆஸ்பத்திரியில அப்பாத்துரை

சென்னை, ஏப். 29

பன்மொழிப்புலவரும் பல நூல்களின் ஆசிரியருமான திரு. கா. அப்பாத்துரை கார் விபத்தொன்றில் காயமடைந்தார். பன்மொழிப்புலவர் பிரயாணம் செய்த அம்பாஸிடர் கார் சென்னை கடற்கரை யுத்த ஞாபகார்த்த மண்டபத்துக்கருகில் பஸ் ஒன்றுடன் மோதியதால் இந்த விபத்து ஏற்பட்டது. திரு. அப்பாத்துரைக்கு முகத்தில் பலத்த காயம் ஏற்பட்டதால் சென்னை அரசினர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## தாதி துணையாள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி

மாதம் முதலாம் திகதி நடத்தப்பட்ட பரீட்சை ரத்துச்செய்யப்பட்டுள்ளது. மேற்படி பரீட்சையை எடுத்த பரீட்சார்த்திகள் அப்பரீட்சைக்குப்பதிலாக மாணவத் தாதிகளைத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுவார்கள். இப்போட்டிப் பரீட்சை அக்டோபர் மாதம் 31-ம்திகதி நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது,

இதுசம்பந்தமாகச் சுகாதாரப்பகுதி விடுத்துள்ள அறிவித்தலில் பரீட்சார்த்திகள் போட்டிப் பரீட்சைக்குப் புதிதாக விண்ணப்பம் அனுப்ப வேண்டியதில்லையெனவும் இப்போட்டிப் பரீட்சைக்குப் புதிதாக ஏனையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படவில்லையென்றும் குறிப்பிட்டுள்ளது.

(5-ம் கலத் தொடர்ச்சி)

யார்களுக்கும் ஏன் இப்டிக் கஷ்டம் வரவேண்டும்? ஒன்றும் புரியவில்லை. அவர் சீக்கிரம் குணமடைந்து இங்கு திரும்ப ஆண்டவன் அருள் செய்வாராக!

* * *

முந்தைகாண் மூவரிலும்
முதலானன்காண் மூவிலைவேல்
மூர்த்திகாண் முருகவேட்குத்,
தந்தைகாண் தண்டமா முகத்
திறைற்குத் தாதைகாண்
தாழ்ந்தடியே வணங்குவார்க்
குச், சிந்தைகாண் சிந்தாத
சித்தத்தார்க்குச் சிவனவன்
காண் செங்கண்மால் விடை
யொன் றேறும், எந்தைகாண்
எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன்காண் அவனென்
எண்ணத்தானே.

— திருநாவுக்கரசர்.

## ஐயாறன் எழுதுவது

இந்தியாவைத் தமது "தாய்நாடு" என்றாராம், இலங்கையில் பிறந்த பௌத்த சிங்கள ஞானியான அனகாரிக தர்மபாலா. அதுமட்டுமல்ல 31 வருடங்களுக்கு முன்பாக அவர் கல்கத்தாவிலே, காலமானபோது, தமது அஸ்தியை இந்தியாவைவிட்டு இலங்கைக்குக் கொண்டுபோகப்படாதென்றும், புத்தர்பெருமான் அவதரித்த அந்தப் புண்ணிய பூமியிலேயே தாமும் மீண்டும் 20 வருடங்களில் பிறக்கப் போவதாகவும் கூறியதாக ஓரன்பர் 'அப்ஸவர்' பத்திரிகையில் எழுதியிருக்கிறார்.

இன்று யாராவது ஒரு சிங்கள பௌத்த அன்பர் இந்தியாவைத் தமது தாய்நாடென்றோ, அல்லது அங்கேயே தாம் மறுஜன்மத்தில் பிறக்க விரும்புவதாகவோ சொல்லத் துணிவாரா? அப்படிச் சொன்னால் அவர்மீது எவ்வளவு வசைமாரி பொழியும்! இன்றைய நிலையைப் பற்றி அனகாரிக தர்மபாலா மீண்டும் வந்தால் என்னதான் கூறுவாரோ! எப்படியும் அப்பெரியார் கூறியதை, சிலராவது ஞாபகம்வைத்து எழுதியுள்ளது பெரிய காரியம்.

மகாத்மா காந்தி 1927-ம் வருடத்தில் இலங்கை வந்தபோது, இந்தியாவைத் தங்கள் 'தாய்நாடு' என்று இங்கு பல சிங்கள அன்பர்கள் அவரிடம் குறிப்பிட்டதைக் கேட்டதும் அது தமக்கு மிகவும் மகிழ்ச்சியளிப்பதாகக் கூறினராம். ஆனல் இரு நாடுகளும் அவரது முயற்சியால் சுதந்திரம் பெற்றபின், இரண்டுக்குமுள்ள உறவைப் பார்க்க அவர் மனம் என்ன பாடுபடும்!

* * *

இந்தியாமீது ஸ்ரீ தர்மபாலாவுக்கு இருந்த மதிப்பைப் பற்றி மற்றுமொரு கதையை அதே கட்டுரையில் படித்தேன். நீங்களும் கேளுங்கள். "ஒருநாள் ஓர் இந்தியர் வந்து, ஸ்ரீ தர்மபாலாவுடன் நீண்ட நேரம் பேசிச் சென்றார். அவர் சென்றபின் ஸ்ரீ தர்மபாலா என்னை அழைத்து, என்னிடம் பேசிய அந்த மனிதரை நீங்கள் கவனித்தீர்களா? 40 வருடங்களாக அவரை எனக்குத் தெரியும். அப்போது கொஞ்சம் பணம் கைமாற்றாகக் கொடுத்தேன். அடியோடு மறந்தும்விட்டேன். ஆனல் நாற்பதுவருடநீண்டகாலத்துக்குப் பின்னர் அவர் வந்து அப்பணத்தைத் திருப்பிக்கொடுக்கிறார்! நமது நாட்டைச் சேர்ந்தவர் எவரும் இவ்விதம் செய்ய முன்வருவரா?" என்று கேட்டாராம்!

அப்பெரியார் மறைந்த தினத்தை கொழும்பு, கல்கத்தா முதலிய பல இடங்களிலும் நேற்று கொண்டாடியுள்ளனர். இது அவர் பிறந்த நூற்றாண்டு வருடம். இந்தியா-இலங்கை இவ்விரு நாடுகளுக்கும் உயிர்ப் பாலமாக இருந்தவர் அப்பெரியார். அவரது நூற்றாண்டு ஜயந்தி வருடத்திலே, இவ்விரு அண்டை நாடுகளுக்கிடையிலும் மீண்டும் அன்பையும் நட்பையும் பலப்படுத்த ஸ்ரீ அனகாரிக தர்மபாலாவின் ஞாபகம் உதவவேண்டும்.

* * *

கல்கத்தாவிலே சுகமாகி வந்த சுவாமி பிரேமாத்மானந்தாஜி, குளிக்கும் அறையிலே விழுந்து சில மணி நேரம் மூர்ச்சையானாராம். டாக்டர்களின் முயற்சியின் மீது, அவர் மூர்ச்சை தெளிந்து சற்றே பேசியதாயும், இப்போது சுகமடைந்து வருவதாயும் கல்கத்தாவிலிருந்து ஒரு சுவாமி தமக்கு எழுதியுள்ளதாக இங்குள்ள ஓரன்பர் தெரிவிக்கின்றார். பிறருக்காகத் தங்கள் வாழ்க்கையையே தியாகம் செய்துள்ள இவ்வித பெரி

(4-ம் கலம்பார்க்க)

# நீதிமன்றத்தை தாண்டிச்செல்லும் முயற்சி

# தோல்வியடைந்தது

## 17-வது அரசியல் திருத்தச்சட்ட மசோதாவுக்கு லோகசபை ஆப்பு

### 18-வது திருத்த மசோதா வாபஸ்

புதுடில்லி, ஏப். 29

**நேற்று லோகசபையில் 17-வது அரசியல் திட்ட மசோதாவை சட்டமந்திரி திரு. ஆர். கே. சென் பிரேரணை செய்தபோது அதற்கு போதுமான ஆதரவு கிடைக்காததால் மசோதா புறக்கணிக்கப்பட்டது.**

இந்த மசோதா ராஜ்யங்களின் நில சீர்திருத்தச் சட்டத்தை நீதிமன்றத்துக்கு அப்பால் வைக்க வழிசெய்கிறது. மசோதாவுக்கு ஆதரவாக 206 வாக்குகளும் பாதகமாக 19 வாக்குகளும் கிடைத்தபோதிலும் போதிய வாக்குகள் கிடைக்காததால் மசோதா புறக்கணிக்கப்பட்டது. கம்யூனிஸ்ட், பிரஜா சோஷலிஸ்ட மற்றும் சில எதிர்க்கட்சியினர் ஆகியோர் அரசாங்கத்துடன் சேர்ந்து வாக்களித்தனர்.

மசோதா புறக்கணிக்கப்பட்ட போதிலும் மாபெரும் ஆதரவு அதற்குக் கிடைத்ததென்றும் சட்டமந்திரி கூறினார். சட்டமந்திரியும் மற்றும் சிலதொழிற்கட்சி அங்கத்தினர்களும் மணியை அடித்து வெளியே உள்ள அங்கத்தினர்களை அழைத்து மீண்டும் மசோதாவை வாக்கெடுப்புக்கு விடவேண்டுமென சபாநாயகரை வற்புறுத்தினர். ஆனல் என்ன விளைவு ஏற்பட்ட போதிலும் பாராளுமன்ற சம்பிரதாயத்தைத் தாம் பாதுகாக்காமல்விட முடியாது எனக் கூறி இந்தக் கோரிக்கையை சபாநாயகர் நிராகரித்தார்.

1957-ம் ஆண்டு ராஜ்ய சீரமைப்புபற்றிய அரசியல்சட்ட 7-வது மசோதா இதுபோன்ற காரணத்தால் தோல்வியடைந்ததென்றும் எனினும் இதே ஷரத்தை அடிப்படையாகக் கொண்ட 8-வது மசோதாவை சபை பின்பு நிறைவேற்றியதென்றும் கூறப்படுகிறது.

17-வது மசோதாவின் ஷரத்துக்களைக் கொண்ட புதிய மசோதாவை இனி சபையின் அடுத்த கூட்டத் தொடர்வரை கொண்டுவர முடியாது என்றும் கூறப்படுகிறது.

இதற்கிடையில் 18-வது திருத்த மசோதாவை கைவிட்டுவிடுவதென சட்டமந்திரி சென் லோகசபையில் அறிவித்தார். அவசர காலநிலையில் ராஷ்டிரபதியின் உத்தரவின்பேரில் கட்டுப்பாடற்ற அதிகாரத்தை அரசாங்கத்துக்கு அளிக்குமுகமாக இம் மசோதா கொண்டுவரப்பட்டது. இம்மசோதா வலுத்த சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. காங்கிரஸில் சில அங்கத்தினர்களும் எதிர்க்கட்சி அங்கத்தினர்களும் வெளியிலும் இந்த மசோதாவை எதிர்த்ததால் எதிர்ப்புக்கு உரிய மதிப்பளிக்க அரசாங்கம் விரும்புகிறது என சட்ட மந்திரி கூறினர்.

## மே. பாகிஸ்தானிலும் கொடுமையாம

ஜம்மு, ஏப். 29

மேற்கு பாகிஸ்தானிலும் மைனரிட்டிகளுக்குக் கொடுமைகள் இழைக்கப்படுவது பற்றிய தகவல்கள் கிடைத்துள்ளன. மேற்கு பாகிஸ்தானைச் சேர்ந்த சியால்கோட் ஜில்லாவில் சுமார் 1500 ஹிந்துக் குடும்பங்கள் உள்ளன. உதில் அநேகர் ஷெட்யூல் வகுப்பினர்

சென்றவாரம் ஜம்முவில் ரணவீர்சிங்கபுரா என்ற இடத்துக்கு வந்துள்ள ஒரு தம்பதிகள் பாகிஸ்தானில் தாங்கள் பட்ட கஷ்டங்களை பொலிசிடம் கொடுத்துள்ள வாக்குமூலத்தில் விவரித்துள்ளனர்.

மேற்கு பாகிஸ்தானிலுள்ள சிறுபான்மையினர் ஒடுக்கப்படுவதாயும் ஷெட்யூல் வகுப்பினர் பாகிஸ்தானில் தங்கியிருந்து வருவது சிரமமாகியிருக்கிறதென்றும் அவர்கள் தங்கள் வாக்குமூலத்தில் கூறியுள்ளனர்.

"பாகிஸ்தானில் எங்கள் உயிருக்குப் பாதுகாப்பு இல்லை. அங்கு திருப்பியனுப்பப்படுவதைவிட சாவதே மேல்" என இத்தம்பதிகள் கூறினர்.

தங்கள் வகுப்பைச் சேர்ந்தவர்கள் நிர்ப்பந்தமாக மதம் மாற்றப்படுவதாயும் அவர்கள் தெரிவித்தனர்.

---

## எர்ஹாட் பாகிஸ்தான்வருவார்

பொன், ஏப். 29

மேற்கு ஜெர்மன் பிரதமா டாக்டர் எர்ஹாட், பாகிஸ்தானுக்கு வருமாறு ஜனதிபதி அயூப்கான் விடுத்த அழைப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறார்.

## ஷேக் வழக்குக்கு செலவு ரூ. 32 லட்சம்

புதுடில்லி, ஏப். 29

1964-ம் ஆண்டு மார்ச் 31-ந் திகதிவரை ஷேக் அப்துல்லாமீது நடத்திய வழக்குக்காக ரூ. 31.54 லட்சம் செலவிடப்பட்டதென ராஜ்யசபையில் அறிவிக்கப்பட்டது.

## யுதாண்டு சைப்ரஸ் செல்வார்

நியூயோர்க், ஏப். 29

அவசியமானல் தாம் சைப்ரஸுக்கு விஜயம் செய்யப் போவதாக ஐ. நா. தலைமைக் காரியதரிசி யுதாண்ட் கூறினர். இதற்கிடையில் சைப்ரஸில் அமைதியை பாதுகாக்க தமது படைகள் சகல அவசியமான நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்ளும் என இந்தியாவைச் சேர்ந்த ஐ. நா. தளபதி எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

---

## ஜாப். மன்னருக்கு ராதாகிருஷ்ணன் வாழ்த்து

புதுடில்லி, ஏப். 29

ஜப்பானிய மன்னரின் பிறந்ததினத்தை முன்னிட்டு ஜனதிபதி ராதாகிருஷ்ணன் அவருக்கு வாழ்த்துச் செய்தி ஒன்றை அனுப்பியிருக்கிறார்.

## சீன உள்நாட்டு விவகாரத்தில் இந்தியா தலையிடவில்லை"

### புதுடில்லி மறுப்பு

புதுடில்லி, ஏப். 29

தனது உள்நாட்டு விவகாரங்களில் இந்தியா தலையிட்டு வருவதாய் சீன சுமத்தியுள்ள குற்றச்சாட்டை இந்தியா நிராகரித்திருக்கிறது. இதுசம்பந்தமான குறிப்பு சீனத் தூதராலயம் மூலம் ஒப்படைக்கப்பட்டது

இந்தியா, சீனவுக்கெதிரான சதி நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருவதாயும், தலாய்லாமாவுக்கு ஊக்கமளித்து உள்விவகாரத்தில் தலையிட்டு வருகிறதென்றும் சீன குற்றம் சாட்டியிருந்தது.

இவ்வித அர்த்தமற்ற செயல்களினல் சீன பதற்றநிலையைத் தீவிரப்படுத்திவருகிறதென்றும், தலாய்லாமா அரசாங்கத்தின் வரம்புக்குட்பட்டே இயங்கிவருகிருரென்றும் இந்தியக் குறிப்பு கூறுகிறது.

'சதி நடவடிக்கையில் ஈடுபட தலாய்லாமாவுக்கு ஒருபோதும் அனுமதியளிக்கப்பட்டதில்லை. கருத்து வழங்கும் சுதந்திரம் அவருக்குண்டு. தலாய்லாமா பௌத்த நாடுகளில் சுற்றுப்பிரயாணம் செய்ய விரும்பினல் அவருக்கு அரசாங்கம் இடையூறுசெய்வதற்கில்லை. சீன இதுபோன்ற கற்பனைக் குற்றச்சாட்டுகளையும் எச்சரிக்கையையும் அனுப்புவது, பதற்றநிலையைத் தணிப்பதே தமது உத்தேசமென்று கூறும் சீனவின் வாதத்தை பொய்ப்பிக்கிறது" என்றும் இந்தியக் குறிப்பு கூறுகிறது.

சீன ஏகாதிபத்திய நோக்குடனும், ஆசியாவில் ஆதிக்கம் செலுத்தும் நோக்கத்துடனும் ஆக்கிரமிப்பு நோக்கம் கொண்டிருப்பதாயும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

## "அஸ்ஸாமில் எல்லைப்புற மக்கள் வெளியேற்றப்படுவர்"

### சட்டவிரோதக்குடியேற்றத்தை தடுக்க நந்தா திட்டம்

புதுடில்லி, ஏப்ரல் 29

அஸ்ஸாம் – கிழக்கு பாகிஸ்தான் எல்லையில் சட்டவிரோதமாக பாகிஸ்தானியர் ஊடுருவுவதைத் தடுக்கும் பொருட்டு அஸ்ஸாம் எல்லையிலுள்ள மக்கள் அனைவரையும் வெளியேற்ற அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது என உள்நாட்டு மந்திரி திரு. நந்தா லோகசபையில் கூறினர்.

சட்டவிரோதக் குடியேற்றம் தீவிரமாய் இருக்கும் பகுதிகளில் அரை மைல் முதல் ஒரு மைல் தூரத்திற்கு எல்லை நெடுகிலுமுள்ள மக்களை அரசாங்கம் விரைவில் வெளியேற்றும் என நந்தா குறிப்பிட்டார்.

இரு ராஜ்யத்தின் உள்விவகாரம் என்ற போதிலும் தேசிய பந்தோபஸ்துக்கு அவசியமான காரியம் என்றும் அவர் கூறினர்.

## "இந்தியாவை சீன தாக்கினல் யு. எஸ். உதவும்"

### இந்திராகாந்தி பேட்டி

நியூயோர்க், ஏப். 29

இந்தியாவைமீண்டும் சீன தாக்கினல் அமெரிக்காவும் மற்றும் மேலைநாடுகளும் உதவிக்கு வரும் என நம்புகிறேன். ஆனல் இந்த உதவி இந்தியாவின் நடுநிலைமைக் கொள்கையைப் பாதிக்காது" என்று ஸ்ரீமதி இந்திராகாந்தி ஒரு பேட்டியில் கூறினர்.

இந்தியாவைச் சீன தாக்கினல் ரஷ்யா உதவிக்கு வருமா என்ற கேள்விக்கு அவர் பதிலளிக்க மறுத்துவிட்டார்.

முன்பு இந்தியாவைச் சீன தாக்கியபோது நிதானம் காட்டுமாறு சீனவை ரஷ்யா வற்புறுத்தி வந்திருப்பதாயும் இப்போது பத்திரிகைச் செய்திகளிலிருந்து ரஷ்யாவும் சீனவும் நேசமாக இருக்கின்றனவா எனச் சொல்ல முடியாது என்றும் ஸ்ரீமதி காந்தி கூறினர்.

"சமீபத்தில் ஏற்பட்டுள்ள சம்பவங்கள் ராணுவக் கூட்டு ஏற்பாடு தகர்ந்துவிட்டதென்பதையும் நடுநிலைமைக் கொள்கை உறுதியடைந்திருக்கிறது என்பதையும் கூட்டுவதாக அவர் கூறினர்.

இதற்கு உதாரணமாக பாகிஸ்தானுக்கும் கம்யூனிஸ்ட் சீனவுக்குமிடையே ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்தையும் பிரிட்டன், பிரான்ஸ் முதலிய நாடுகளுக்கும் கம்யூனிஸ்ட் சீனவுக்குமிடையே ஏற்பட்டுவரும் வர்த்தக உறவையும் அவர் குறிப்பிட்டார்.

கம்யூனிஸ்ட் சீனவுக்கும், பாகிஸ்தானுக்குமிடையே நெருங்கிய உறவு ஏற்பட்டிருப்பதால் இந்தியாவை மீண்டும் தாக்கக்கூடிய சாத்தியக்கூறு அதிகரித்திருப்பதாய் ஸ்ரீமதி காந்தி கூறினர்.

---

## சாம்ராஜ்ய இலக்கிய மகாநாடு

லண்டன், ஏப். 29

இவ்வருடம் செப்டம்பர் மாதத்தில் சாம்ராஜ்ய இலக்கிய மகாநாடு ஒன்றை இங்கிலாந்தில் நடத்த லீட்ஸ் பல்கலைக்கழக இலக்கியப் பிரிவினர் ஒழுங்குகள் மேற்கொண்டுள்ளனர். இம்மகாநாட்டில் இலங்கை உட்பட 60 நாடுகள் கலந்துகொள்ளவிருக்கின்றன.

---

## 'அயூப்புடன் பேசக்கூடும்'

புதுடில்லி, ஏப்ரல் 29

சாம்ராஜ்யப் பிரதமர்கள் மகாநாட்டுக்காக லண்டன் செல்லும் போது, சந்தர்ப்பம் கிடைத்தால் பாகிஸ்தான் ஜனதிபதி அயூப்கானுடன் இந்திய-பாகிஸ்தான் பிரச்னை பற்றித் தாம் விவாதிக்கக் கூடுமென பிரதமர் நேரு லோகசபையில் கேள்வி ஒன்றிற்குப் பதிலளிக்கையில் கூறினர்.

---

## மதத்தலைவர் காலமானர்

பம்பாய், ஏப். 29

பம்பாயில் போரா சமூகத்தின் மதத்தலைவர் நேற்று தனது 82-வது வயதில் காலமானர்.

## ஸ்ரீமதி அம்புஜம்மாள், நாராயணனுக்கு விருதுகள்

### ராஷ்டிரபதி வழங்கினர்

புதுடில்லி, ஏப். 29

நேற்று ராஷ்டிரபதி பவனில் நடைபெற்ற கண்கவர் வைபவம் ஒன்றில், பல துறைகளிலும் சிறப்புப் பணி புரிந்த 27 பேருக்கு விருதுகள் வழங்கப்பட்டன

இவர்களில் 5 டாக்டர்கள், 3 விளையாட்டு வீரர்கள், என்ஜினியரிங், கல்வி, பத்திரிகைத்துறை, இலக்கியம், நுண்கலை, தேய்பொருள் ஆராய்ச்சி ஆகியவற்றில் சிறப்பான பணியாற்றியவர்கள் ஆகியோர் இருந்தனர்.

ஜனதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் விருதுகளை வழங்கினர்.

இலக்கிய ஆசிரியரும் கல்விமானுமான கர்காசாகிப் காலேல்காருக்கு 2-வது உயர்ந்த விருதான "பத்மவிபூஷன்" வழங்கப்பட்டது. 14 பேருக்கு "பத்மபூஷன்" விருதுகளும், 9 பேருக்கு "பத்மஸ்ரீ" விருதுகளும் வழங்கப்பட்டன.

ஸ்ரீமதி அம்புஜம்மாள், எழுத்தாளர் ஸ்ரீ ஆர். கே. நாராயண், ஸ்ரீ. டி. எஸ். ராமச்சந்திரன், ஸ்ரீ. எம். ஜே. கோபாலன் ஆகியோருக்கு "பத்மஸ்ரீ" வழங்கப்பட்டது.

சமஸ்கிருத அறிஞர்களுக்கு ராஷ்டிரபதி பொன்னடை போர்த்தினர். மற்றவர்களுக்குப் பாராட்டுப் பத்திரங்கள் வழங்கினர். விருதுபெற்றவர்களுக்கு, பின் வரவேற்பு ஒன்றை நடத்தினர்.

உப ஜனதிபதி டாக்டர் ஸகிர் ஹுசெய்ன், மத்திய மந்திரிகள் ஆகியோர் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

---

## மேனன் பற்றி இந்திரா

நியுயோர்க், ஏப். 29

திரு. கிருஷ்ணமேனனைப் பற்றியும், அவருடைய வருங்கால அரசியல் அந்தஸ்தைப்பற்றியும் நியுயோர்க் நிருபர்கள் ஸ்ரீமதி இந்திராகாந்தியிடம் கேட்டனர்.

"நான் ஏற்கனவே கூறிவந்திருப்பது போல் காங்கிரஸ் கட்சியில் திரு. மேனனுக்கு குறிப்பிடத்தக்க பதவி இல்லை. இப்போதும் அதே நிலைதான்" என்று இந்திரா கூறினர்.

"உங்களிடமும், உங்கள் தந்தையிடமும் மேனனுக்கு மிகுந்த செல்வாக்கு உண்டு எனக் கூறப்படுவது உண்மையா" என்று நிருபர்கள் கேட்டனர்.

"அது உண்மையல்ல" என்ருர் ஸ்ரீமதி காந்தி.

---

## நேரு

புதுடில்லி, ஏப். 29

அகில இந்தியக் காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக பிரதமர் நேரு மே மாதம் 15-ம் திகதி பம்பாய் செல்வார்.

# "பத்திரிகை அரசாங்க உடைமையானல் சர்வாதிகாரம் ஏற்படும்"

## பத்திரிகைக் கமிஷன்முன் வைத்திலிங்கம் சாட்சியம்

கொழும்பு, புதன்

"பத்திரிகைகள் அரசாங்கத்தின் உடைமையாக்கப்பட்டால், அது ஜனநாயகத்திற்கு ஒரு பயமுறுத்தலாக இருப்பது மட்டுமன்றி, ரஷ்யா, சீன, ஐக்கிய அரபு குடியரசு போன்ற நாடுகளில் உள்ளது போல சர்வாதிகாரத்திற்கும் வழி வகுக்கும்."

பத்திரிகை கமிஷன் முன் நேற்று சாட்சியமளிக்கும் போது 'ஒற்றுமை' ஆசிரியரான திரு. எஸ். வைத்திலிங்கம் மேற்கண்டவாறு கூறினர்.

கமிஷனர்: உமக்கு சிங்களம் பேசத் தெரியுமா?

வைத்திலிங்கம்: ஆம்,

கமிஷனர்: சிங்களத்தில் எழுதத் தெரியுமா?

வைத்திலிங்கம்: "வெகு காலத்துக்கு முன்னர் நான் சிறிதளவு சிங்களம் கற்றேன். எனது தாய் மொழியான தமிழுக்கு, அரசாங்கம் உரிய அந்தஸ்து அளிக்குமானல், நான் கடந்த கால அனுபவத்தைக் கொண்டு சிங்களத்தை படிக்க முயற்சிபேன். எனது தாயை மதிக்காதவரை எனது தாய்க்கு மரியாதை கொடுக்காதவரை நான் மதிக்கமாட்டேன். அவருடைய தாய்க்கும் நான் மரியாதை செலுத்த மாட்டேன்.

### இந்தியத் தொழிலாளர்கள்

இந்தியத் தொழிலாளர்கள் இலங்கையை விட்டு வெளியேறவேண்டுமென்று திரு. கே. எம். பி. ரஜரத்ன கூறுகிறர். தோட்டங்களிலிருந்து இந்தியத் தொழிலாளர்கள் வெளியேறினல் தேயிலைத் தோட்டங்கள் யாவும் காடுகளாக மாறி வரும் என்றும் திரு, வைத்திலிங்கம் கூறினர்.

திரு. கே. டி. டீ. சில்வா (தலைவர்), திரு. டபிள்யூ. ஜ. அபயகோன், திரு. எஸ். டபிள்யூ. வல்பிற்ற ஆகியோர்களைக் கொண்ட பத்திரிகை கமிஷன் முன், திரு. வைத்திலிங்கம் தொடர்ந்து சாட்சியமளிக்கும் போது கூறியதாவது: கடந்த வருடம் மூன்று மாதங்கள் நான் கெய்ரோ தங்கியிருந்தேன். அப்பொழுது பிறதேசத்தவர்கள் எழுதிய எந்த விதமான கட்டுரைகளையும் படிக்க முடியாமலிருந்தது. அங்குள்ள பத்திரிகை ஆசிரியர்கள், உல்லாச பிரயாணிகளிடமிருந்து எதையும் கேட்பதற்கு விருப்பமில்லாதவர்கள் போல் காணப்பட்டார்கள். இங்குள்ள எந்த மனிதனுக்கும் அல்லது உல்லாச பிரயாணிகளுக்கும், பேச்சுச் சுதந்திரம் இருக்க வேண்டியது மிகவும் அவசியம். ஒருவருடைய எண்ணங்களை, அபிப்பிராயத்தை சுதந்திரமாக தெரிவிக்க உரிமை இருக்க வேண்டும்.

## "சிரமதானத்தின் மகத்துவம்"

சுழிபுரம், செவ்வாய்

அராலி கிழக்கு கலைமகள் கிராம முன்னேற்ற சனசமூக நிலைய புதுக்கட்டடத் திறப்பு விழாவும் ஆண்டுவிழாவும் திரு. அ. பாலசிங்கநாயகம் தலைமையில் நடைபெற்றது. புதியகட்டடத்தை திரு. இ. நாகலிங்கம் திறந்துவைத்தார். வட்டுக்கோட்டை கிராமசபைத் தலைவர் முதலியார் செ சின்னத்தம்பி, டாக்டர் அ. தவரத்தினசிங்கத்தின் திருவுருவப் படத்தைத் திரைநீக்கம்செய்து வைத்தார்.

முதலியார் செ. சின்னத்தம்பி பேசுகையில் கூறியதாவது:-

"நாம் எமது உடல் உழைப்பு மூலமே முன்னேற வேண்டும். இன்று எல்லா சக்திகளையும் ஒன்றுபடுத்தக்கூடிய சாதனம் சிரமதான இயக்கமாகும். இப்புனித இயக்கத்தை நாம் ஒன்றுபட்டு செயல்படுத்துவோமேயானல், அதிக லாபத்தையும் முன்னேற்றத்தையும் காண்போம். காந்திமகான் காட்டிய சிரமதானப் பாதையை எமது இளைஞர்கள் பின்பற்றி நடப்பார்களானல் நல்லவர்களாக, வல்லவர்களாக வாழலாம்" என்று குறிப்பிட்டார்.

திருவாளர்கள் இ. நாகலிங்கம், இ. நடராசா, த. துரைசிங்கம், புதுமைலோலன் உட்பட மற்றும் பலர் பேசினர். சங்கீத பூஷணம் ரி. இராசலிங்கம் கோஷ்டியினரின் சங்கீதக்கச்சேரியும் நடைபெற்றது.

## அருந்ததியர் சங்க 32-வது ஆண்டு விழா

கொழும்பு, புதன்

அகில இலங்கை அருந்ததியர் (தமிழர்) சங்கத்தின 32-வது ஆண்டுவிழா திரு. க. பி. பூபாலன் தலைமையில் நடைபெற்றது. விழாவில் திருவாளர்கள் ம தானியேல், மு. வேலாயுதம், மா. சே. அருண், ஈ. வி. அருமைதாஸ், வை ச. பெருமாள், பி. டி. லூர்க்கஸ், ஆ. மு. அழகிறைவனர், கு.யா. திராவிடக்கழல் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். விழாவில் நிறைவேற்றப்பட்ட சில தீர்மானங்கள் வருமாறு:-

கிளைகள் இல்லாதிருக்கும் இடங்களில் புதிய கிளைகளைத் தோற்றவிருக்கும் முயற்சியினை மேற்கொள்ளுமாறும் ஆர்வம் உள்ள சமூக இளைஞர்களையும் பெரியோர்களையும் இவ்வாண்டு விழா தாழ்மையோடு கேட்டுக்கொள்ளுகின்றது.

திரு. ஓ. ஆ. மா. சாமி நினைவுச்சின்ன நிதி இரண்டாயிரம் ரூபாய் திட்டத்தில் இதுகாலம்வரை ஐந்நூறு ரூபாய் மாத்திரமே வசூலானதால் திட்டபூர்த்திக்கான வசூலைத் தொடங்குவதென இவ்வாண்டுவிழா தீர்மானிக்கின்றது.

இலங்கைவாழ் சமது சமூக மக்கள் மத்தியில் ஒற்றுமையின்மை காரணமாக சிதறிக் கிடக்கும் சமூக இயக்கங்களை அகில இலங்கை அருந்ததியர் (தமிழர்) சங்கத்தில் இணைப்பதின் மூலம் சமூக ஒற்றுமைக்கு ஒன்றுபட்டுழைக்க முன்வருமாறு சமூகப் பொது மக்களையும் ஸ்தாபனங்களையும் முன்னோடிகளையும் இவ்வாண்டுவிழா உரிமைப்பாசத்தோடு கேட்டுக் கொள்ளுகின்றது.

கவிஞர் பாரதிதாசன் மறைவுக்கும், திரு வி. ஆர். சாசாமியின் மறைவுக்கும் இச்சங்கம் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது.

## சீனமீது குற்றச்சாட்டு

மாஸ்கோ, ஏப். 29

முதலாளித்துவ நாடுகளிலுள்ள கம்யூனிஸ்டுகளை ஆயுதம் ஏந்திக் குழப்பம் செய்யுமாறு சீன தூண்டி வருகிறது என்றும், அமெரிக்க - ரஷ்ய உறவில் சீன தலையிட்டு வருகிறது என்றும் ரஷ்யப் பத்திரிகை ஒன்று குற்றஞ்சாட்டியது.

## மேத்தானந்தா தெரிவிக்கும் அச்சம்

பண்டாரவளை, புதன்

பௌத்த ஜாதிக பலவேகயாவின் தலைவர் மேத்தானந்தா திருகோணமலையை வத்திக்கானின் கோட்டையாக்க முயற்சிகள் எடுக்கப்படுவதாக நிலவும் வதந்தியைப்பற்றி விசாரிப்பதற்காக ஒரு கமிஷன் நியமிக்கப்படவேண்டுமென்று சீவலி வித்தியாலயத்தில் நிகழ்ந்த பௌத்த பலவேகயாவின் கூட்டத்தில் பேசும்போது கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில், அரசாங்கத்திலுள்ள பௌத்தமத எதிர்ப்பாளர் துரத்தப்படுவதுடன மந்திரிசபை இரகசியங்கள் சில எவ்வாறு வெளியேறின என்பதையும் பிரதமர் விசாரணை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

## சக்ளா

புதுடில்லி, எப். 29

வருகிற ஞாயிற்றுக்கிழமை இந்தியக் கல்வி மந்திரி திரு. சகளா பம்பாயிலிருந்து நியூயோர்க் புறப்படுவார். ஐ.நா. காஷ்மீர் விவாதத்தில் அவர் கலந்துகொள்வார்.

## விவசாயத்துக்கு ரூ. 2750 கோடி

புதுடில்லி, ஏப். 29

4-வது திட்ட காலத்தில் 2750 கோடி ரூபாய் விவசாய அபிவிருத்திக்குச் செலவழிப்பதென திட்டக்கமிஷன் முடிவு செய்திருக்கிறது.

## ஜெனிவா மகாநாடு ஒத்திவைப்பு

ஜெனிவா, ஏப்ரல் 29

மூன்று மாதங்கள் நடைபெற்ற ஆயுதப்பரிகரண மகாநாடு மீண்டும் ஜூன் மாத ஆரம்பம்வரை ஒத்திவைக்கப்பட்டது.

## லாவோஸில் மீண்டும் சண்டை

வியண்டயன், ஏப். 29

லாவோஸ் நெருக்கடிக்கிடையில், மத்திய லாவோஸிலுள்ள ஜார் சமவெளியில் மீண்டும் சண்டை ஆரம்பமாகியிருப்பதாயும், இடதுசாரி ராணுவம் வலதுசாரிகளின் ஒரு இலக்கைப் பிடித்திருப்பதாயும் அறிவிக்கப்பட்டது.

## இந்திரா திரும்பினர்

புதுடில்லி, ஏபு. 29

அமெரிக்கா சென்றிருந்த ஸ்ரீமதி இந்திரா காந்தி இன்று காலை புதுடில்லி திரும்பினர். ஜனதிபதி ஜோன்ஸனுடன் தாம் நேச முறையில் பேச்சு நடத்தியதாக அவர் கூறினர்.

## சக்கரவர்த்திக்கு சுகவீனம்


நியுயோர்க், ஏப். 29

ஐ. நா.வில் இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதியாக உள்ள திரு. பி. என். சக்கரவர்த்தி நியுயோர்க் ஆஸ்பத்திரிஒன்றில் ஓய்வுக்காகவும், பரிசோதனைக்காகவும் சேர்க்கப்பட்டிருக்கிறர். இதய சோர்வினல் அவர் பாதிக்கப்பட்டிருப்பதாக டாக்டர்கள் கூறினர்கள்.

## ஸ்ரீவில்லிபுத்தூர் கோபுரத்திருப்பணி

மதுரை, ஏப். 29

ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவில் கோபுரத்திருப்பணி பற்றி நிபுணர்கள் கமிட்டி தனது அறிக்கையை அரசாங்கத்திற்குச் சமர்ப்பித்துள்ளது. இதற்கு ரூ.1 லட்சம் செலவாகும். இக்கோவில் கோபுரத்தின் உயரம் 192 அடியாகும்.





ஹலிபோரேஞ்

ஒவ்வொரு துளியிலும்

இரண்டு மூன்று தேக்கரண்டியளவு ஹலிபோரேஞ் தினமும் உங்கள் குழந்தைக்குக் கொடுத்து, திடமான எலும்புகளையும், வன்மையான பற்களையும், உறுதியான உடம்புகளையும் வளருங்கள். ஒரு வளரும் பிள்ளையின் எலும்புகள் திடம்பெற, பற்கள் வன்மையுற, உடம்பு உறுதியாகத் தேவைப்படும் அத்தனை ஜீவசத்துணவுகளையும், ஒவ்வொரு சொட்டு ஹலிபோரேஞ்சிலும் அபரிமிதமாக அடக்கப்பட்டிருக்கிறது. நீங்களுங்கூட தினமும் ஹலிபோரேஞ் பாவியுங்கள். தொற்று நோய், தடுமல் இவைகளை எதிர்க்கத் தேவைப்படும் பாதுகாப்பான ஜீவசத்துக்கள் A, D, C, இம்மூன்றும் ஹலிபோரேஞ்சிலுண்டு.

ஹலிபோரேஞ்சினல் உங்கள் குடும்பத்தைக் களையான குதூகலமான குடும்பமாக்குங்கள்.




ஹலிபோரேஞ்

எத்தனை நல்லது அருந்த
இதுவே உங்களுக்கு நல்லது
இதொரு அலன்பரீஸ் தயாரிப்பு

AT-

# இன்று நடைபெறும் கிரிக்கெட் போட்டி

## இந்திய பாடசாலை மாணவர்களுடன் யாழ். பாடசாலை மாணவர்கள் 'மோது'கின்றனர்

யாழ்ப்பாணம், வியாழன் இந்திய பாடசாலை மாணவர்கள் கோஷ்டிக்கும் யாழ்ப்பாணம் தெரிவுப் பாடசாலைகள் கோஷ்டிக்குமிடையே யாழ்ப்பாண மத்திய கல்லூரி மைதானத்தில் இன்று கிரிக்கெட் போட்டி நடைபெறும்.

யாழ்ப்பாணம் பாடசாலைகள் கிரிக்கெட் விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் நடைபெறும் இக் கிரிக்கெட் போட்டி, நாளைவரை தொடர்ந்து நடைபெறும்.

கிரிக்கெட் போட்டியில் கலந்து கொள்ளும் யாழ்ப்பாணப் பாடசாலைகள் தெரிவுக் கோஷ்டிக்கு, யாழ்ப்பாணம் பரி யோவான் கல்லூரியைச் சேர்ந்த தெய்வேந்திரம் காப்டனாக விளங்குகிறார். இந்திய பாடசாலை மாணவர்கள் கோஷ்டியின் காப்டனாக, கட்டானி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

# தலவாக்கொல்லை செல்லும் யாழ். விளையாட்டு கோஷ்டி

யாழ்ப்பாணம், வியாழன் யாழ்ப்பாண "ஒக்கேஷனல்" கோஷ்டியினர், தலவாக்கொல்லைக்குச் சென்று தொடர்ச்சியாக பல விளையாட்டுக்களை நடத்த ஒழுங்கு செய்துள்ளனர்.

இக்கோஷ்டியினர் கிரிக்கெட், "பாஸ்கட்போல்", டெனிஸ் ஆகிய போட்டிகளை தலவாக்கொல்லையிலுள்ள தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் வளவில் நடத்துவார்கள். இப் போட்டிகள் இவ்வார இறுதியில் நடைபெறும்.

கிரிக்கெட் கோஷ்டிக்கு திரு. றிச்சார்ட் கருணைராஜனும், டென்னிஸுக்கு திரு. ஜே. பி. செல்லையாவும், பாஸ்கட் போலுக்கு திரு. கிறிஸ்ரி றிச்சார்ட்ஸும் தலைமை வகிப்பார்கள். இந்தக் கோஷ்டியில் திருவாளர்கள் ஏ. எம். புரோடி, எஸ். இரத்தினசபாபதி, டி. ஜே துரைரத்தினம், கே. மகானந்தன், கே. மகேஸ்வரன், என். தியாகராஜா, டி. ராஜ்குமார், சுகுணம் ராஜரத்தினம், கிறிஸ்டி செபரத்தினம், எம். நடராஜா ஆகியோர் உள்ளனர்.


REGAL — JAFFNA
NOW SHOWING
Daily 3Shows. Sats.&Suns. Four
Rock hudson - Kirk douglas
in
The Last Sunset
(Colour)
From 1-5-64
TOKYO by NIGHT


## கணவன் மனைவிக்கு மரணதண்டனை

நீர்கொழும்பு, புதன் வியாங்கொடை சரதிஸ்காமி என்பவரை கத்தியால் குத்திக் கொலைசெய்ததாக, டி. ஏ. எல்ரிஸ்ஹாமி, அவரது மனைவி ஹேமாவதி ஆகியோர் மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில், நீதியரசர் எதிரிகளாகிய கணவனுக்கும் மனைவிக்கும் மரணதண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

இவ்வழக்கு நீர்கொழும்பு அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் வி. சிவசுப்பிரமணியம் முன்னிலையில் விசாரணைசெய்யப்பட்டது.

## சனசமூக நிலைய விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், புதன் குப்பிழான் சனசமூக நிலைய வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டிகளில், சிவப்பு இல்லம் முதலாவது இடத்தைப் பெற்று வெள்ளிக்கிண்ணத்தைப்பரிசாகப் பெற்றுக்கொண்டது. சிவப்பு, நீலம், பச்சை ஆகிய இல்லங்களுக்கிடையே நடைபெற்ற இப்போட்டிக்கு உடுவில் எம்.பி. திரு. வி. தருமலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். வீரர்கள் விபரம் வருமாறு:

ஆண்கள் கீழ்ப்பிரிவு: ச. மகாலிங்கம்; மத்தியபிரிவு: வே. தருமலிங்கம்; மேற்பிரிவு; பீ. திரிபுரநாதன்; உயர் மேற்பிரிவு: சி. பஞ்சலிங்கம்.

பெண்கள் கீழ்ப்பிரிவு: ந. சாரதாதேவி, க. அருந்தவம்; மத்தியபிரிவு: க. வசந்தகோகிலாதேவி.

போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு திரு. வி. தருமலிங்கம் எம். பி. பரிசுகள் வழங்கினர்.

---

## வானொலிநிகழ்ச்சிகள்

### வியாழன் 30-4-64

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 சிறுவர் மன்றம், 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 கிளாரினெட், 7-00 பேச்சு — நாடும் நாமும் 7-15 நேயர்விருப்பம், 7-45 தொடர்நாடகம் — "மட்டக்களப்பு மாப்பிள்ளை" — எஸ். பொன்னுத்துரை எழுதியது. 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 லயவின்யாசம், 10-00 நிலைய ஒலிப்பதிவுகள்.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்களஇசை, 6-50 வாத்தியஇசை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 பாட்டு

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 திரைப்பட இசை, 1-30 வாத்தியஇசை, 1-50 குரலிசை, 2-10 இசைக்கோவை, 2-40 ஜெயபேரிகை.

மாலை 5-15 துதிப்பாடல்கள்.

இரவு 6-20 கிராமநிகழ்ச்சிகள், 7-45 பாட்டு, 8-40 குரல் இசை, 9-15 இசைச் சித்திரம், 9-30 அகிலபாரத நாடக நிகழ்ச்சி, 10-35 அருணகிரிநாதர் — இசைவிழா.

---

## புதுவருட நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், வியாழன் ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையத்தின் பொதுக்கூட்டம் நிலையத் தலைவர் வ. இராசையா தலைமையில் நடைபெற்றது. நிலையத்தின் வளர்ச்சி காகப் பாடுபட்ட திரு. த. பாலசிங்கத்தின் அகால மரணத்தை யிட்டு 2 நிமிட மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது. பின்னர் புதுவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்: வே. அ. பாலசிங்கம்; தலைவர்: வ. இராசையா; உபதலைவர்: வ. தம்பையா; காரியதரிசி: வ. முருகேசு; உபகாரியதரிசி: அ. நற்குணம்; தனாதிகாரி: வே: கதிர்காமு; பரிசோதகர்: செ. துரைராசா.

நிர்வாகசபை அங்கத்தவர்களாக க. பவுன்ராசா, வ. தருமராசா, பொ. கந்தசாமி, க. சிவபாதம், பொ. தவமணி, தி. சின்னையா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

# "ஈழநாடு" வெள்ளிக்கிண்ண கைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், வியா. 'ஒலிம்பிக் விளையாட்டுக் கழகம்' நடத்தும் 'ஈழநாடு' வெள்ளிக்கிண்ணத்துக்கான கைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியை இம்முறையும் நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. "ஈழநாடு" வெள்ளிக்கிண்ணத்துக்கான இக்கைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி 'ஏ' பிரிவு: பழைய முறை பந்தாட்டம், 'பி' பிரிவு: பழைய முறை பந்தாட்டம், 'சி' பிரிவு: புதிய முறைப் பந்தாட்டம் என்று மூன்று பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளன. இந்தச் சுற்றுப் போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் கழகங்கள் தங்களது சேர்வுப் பத்திரங்களை மே மாதம் 10-ம் திகதிக்கு முன்னர் ஒலிம்பிக் விளையாட்டுக் கழக காரியதரிசிக்கு பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்கவேண்டும். அனுப்பவேண்டிய விலாசம்: சி. எஸ். சண்முகராஜா, யூனியன் கல்லூரி, தெல்லிப்பளை.

இச்சுற்றுப்போட்டியில் பங்குபற்றும் விளையாட்டு வீரர்கள் அந்தந்த மாகாணங்களில் தொடர்ச்சியாக ஆறுமாதங்களுக்குக் குறையாமல் வசித்திருக்க வேண்டும். இந்த ஆறு மாத காலமும் விளையாட்டு முடிவு திகதியிலிருந்து கணக்கிடப்படும். ஆனால் இச்சட்டம் அரசாங்க ஊழியர்களுக்கு விதிவிலக்காகக் கொள்ளப்படும். இவ்விதியை மீறுபவர்கள் போட்டியில் கலந்துகொள்ள தகுதியற்றவர்களாக கணிக்கப்படுவர்.

இக்கைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இறுதிவிளையாட்டைத் தவிர்ந்த மற்றைய விளையாட்டுகள் ஒலிம்பிக் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறும்.

---

## மூளாய் இளைஞர் வெற்றி

சுழிபுரம், புதன் தாச்சி சுற்றுப் போட்டியில் நேற்றைய தினம் மூளாய் இளைஞர் கோஷ்டிக்கும், சுழிபுரம் கிழக்கு வீரபத்திரர் இளைஞர் கோஷ்டிக்குமிடையே வழக்கம்பரை சனசமூக விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் மூளாய் கோஷ்டியினர் 21 பழங்களையும் சுழிபுரம் கோஷ்டியினர் 19 பழங்களையும் பெற்றனர். இப்போட்டியில் மூளாய் கோஷ்டி மேலதிகமாக இரண்டு பழங்களைப் பெற்று வெற்றி பெற்றது. மூளாய் கோஷ்டியைச் சேர்ந்த பி. விஜயரத்தினம் திறமையாக விளையாடி பலரதுபாராட்டுதலைப் பெற்றுக்கொண்டார்.

---

## ஜனசக்தி வெற்றி

யாழ்ப்பாணம், புதன் ஜனசக்தி விளையாட்டுக் கழகத்திற்கும் அரசடி கந்தர்மடம் நியூஸ்டார் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் ஜனசக்தி விளையாட்டுக் கோஷ்டி வெற்றிபெற்றது. ஜனசக்தி கோஷ்டிக்கு மு. இரத்தினம் தலைவராகவும், க. இரத்தினசிங்கம் நியூஸ்டார் கிளப்பிற்கு தலைவராகவும் விளையாடினர். மத்தியஸ்தர்களாக வ. அம்பலவாணர், வ. தம்பிப்பிள்ளை கடமையாற்றினர்கள்.

---

## இளைஞன் தற்கொலை

காங்கேசன்துறை, புதன் ஓட்டகப்புலத்தைச் சேர்ந்த பா. தவராசா என்னும் 20 வயதுள்ள இளைஞன் நச்சுத் திராவகம் அருந்தி தற்கொலை செய்துகொண்டார்.

இவரின் மரணம் குறித்து நடைபெற்ற விசாரணையின் பின்னர் மரணவிசாரணை அதிகாரி சி. தர்மலிங்கம் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார். காங்கேசன்துறை பொலிசைச் சேர்ந்த க. முத்துகிருஷ்ணன் விசாரணை நடத்தினர்.

## ஊர்காவற்றுறை பட்டினசபை

### கேள்வி விளம்பரம்

1964-ம் ஆண்டு வைகாசி மாதம் 16-ந் திகதி பிற்பகல் 3-00 மணி வரை பின்வரும் வேலைகளுக்கு கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. மரத்தால் செய்யப்பட்ட மூன்றுமலவண்டிகள் தந்துதவ.
2. சென்யேம்ஸ்-காம் வீதி தார்போட.
3. சென்யேம்ஸ் - பீச்ரோட் திருத்தம்.
4. அயித்தாம்பலம்முதலாம் ஒழுங்கை மக்கிபோட.
5. கொத்திகுளம் ரோட்டுத் திருத்தம்.
6. கொல்கழு இடம் திருத்தம் செய்தல்.

மற்றும் விபரங்கள் ஊர்காவற்றுறை பட்டினசபைக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வ. சு. ஐயாத்துரை,
தலைவர், ப. ச, ஊ.

பட்டினசபை-அலுவலகம்,
ஊர்காவற்றுறை,
27-4-64. 344

## வரி விளம்பரம்

### காணவில்லை

24-ந் திகதி எனது சயிக்கிளில் கட்டியிருந்த கணக்குப் புத்தகம்தவறிப்போய்விட்டது. ஆரியகுளச் சந்தியிலிருந்து குருநாதகோயிலுக்கிடையில் கண்டு எடுத்தவர்கள் தயவு செய்து மு. சி. வேலுப்பிள்ளை, சிறும்பிடிய யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்குச் சேர்ப்பிக்கவும்தகுந்த சன்மானம் கொடுக்கப்படும். 268.

### தொய்வு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இலும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50. வைத்தியர் பரிபூரணானந்த கைலாயபிள்ளையார் கோவடி யாழ்ப்பாணம்

### தேவை

எமது கபேயில் சமையல் தவிர்ந்தஏனையபொறுப்புக்களை ஏற்றுக்கடமையாற்றநம்பிக்கையுள்ள ஒருவர் தேவை. 75 ரூபாவும், சாப்பாடும், தங்குமிடவசதியும் அளிக்கப்படும். உடனே வரவும். ச யேம்ஸ், மனோன்கபே, தண்ணீர் தாங்கி வீதி, குருநகர், யாழ்ப்பாணம். 274

## Important Announcement Secretarial and Accountancy Tutory

1. The above institute also provides tuition for Intermediate Examination of the Institute of Bankers to be held in September.

2 Applications for all courses inclusive of the Intermediate of Cost and Works Accountants and Chartered Secretaries will be finalised before 30th instant.

3. Failing accommodation in the morning or After noon Sessions, accommodation can be provided in the evening courses which will be from 5 — 7 p. m.

4 The composite fees per month for Secretaries Intermediate is Rs 50/-, for cost and Works Rs 60/- and for Banking Rs. 40/- The fees per subject is Rs 15/-.

Contact Registrar: Kumaraswamy Buildings, Opposite Bus Stand Power-House Road, Grand Bazaar, Jaffna. 257


சினிமாஸ் திரைகளில்
அடுத்த திரை விருந்து
எஸ். எஸ். ராஜேந்திரன் — விஜயகுமாரி
மற்றும் பலர் நடித்த
நானும் ஒரு பெண்
தென்னாட்டில் 125 நாட்களுக்கு மேல்
ஓடிய உன்னத தமிழ் திரை விருந்து

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
நிந்தாவூர் சினிமா (நிந்தாவூர்) ராஜ்மகால் (கல்முனை) சந்தியா (கம்பளை)
மற்றும் 4 திரைகளில்



எம். ஜி. ராமசந்திரன்—பி. சரோஜாதேவி
நடித்த
பெரிய இடத்துப் பெண்

# “ஆயுத போராட்டம் நடத்தவும் தயார்”

## ரொபர்ட்குணவர்த்தன முழக்கம்

கொழும்பு, புதன்

"பிரதம மந்திரி சிறிமாவோ பண்டாரநாயக்கா பிலிப் குணவர்த்தனவையும் என். எம். பெரேராவையும் மிகவும் குறைந்த நிலைக்கு கொண்டுவந்துவிட்டார். அவர்கள் எல்லோரும் கலக்கமடைந்துள்ளார்கள். சிலர் அலரி மாளிகைக்கும் வேறு சிலர் நுவரேலியாவிற்கும் சென்றார்கள். இதன் பின்பு கூட சிலர் பிரதமரின் மகனுடன் பந்து விளையாடினார்கள். இந்த செயல்களெல்லாம் எப்பாதையை நோக்கிச் செல்கின்றன?"

புதிய நகர சபை மண்டபத்தில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் திரு. ரொபார்ட் குணவர்த்தன மேற்கண்டவாறு கூறினார். தற்போதைய அரசியல் நிலைமை என்னும் விஷயம் பற்றி பேசும்போதே அவர் இப்படிக் கூறினார்.

அக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து கூறியதாவது: ஐக்கிய இடதுசாரி முன்னணியின் 21 கோரிக்கைகளோடு தற்பொழுது புதிதாக 22-வது கோரிக்கையொன்று சேர்க்கப்பட்டுள்ளது. ஐக்கிய இடதுசாரி முன்னணித் தலைவர்களுக்கு இரு மந்திரிப் பதவியளிப்பது தான் புதிய கோரிக்கையாகும் இடதுசாரித் தலைவர்கள் எல்லோரும் தங்கள் தலைமைப் பதவியை இழந்துவிட்டார்கள் பதவி ஆசையினால் தொழிலாள மக்களின் நீண்டகால் போராட்டத்திற்கு முட்டுக்கட்டை போட்டுவிட்டார்கள்.

கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் மூன்று முக்கிய இடதுசாரி கட்சித் தலைவர்களும் நாட்டின் முன்னேற்றம் கருதி ஒன்று கூடினார்கள். அன்று ஒன்று கூடிய இடதுசாரித் தலைவர்கள் இன்று தனித்தனியே அரசாங்கத்துடன் இரகசிய பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார்கள். தலைமைப் பதவிக்காக ஒவ்வொருவரும், மற்றவர்களின் குரல் வளையை நெரிக்க பார்க்கிறார்கள். சுதந்திரக் கட்சியில் சேரக் கூட முயற்சி எடுத்துள்ளார்கள்.

கிராமத்திலும் நகரத்திலும் விவசாயிகளினதும், தொழிலாளர்களினதும், ஒற்றுமையையும், ஐக்கியத்தையும் குலைத்து விட்ட இடதுசாரி தலைவர்கள், தற்பொழுது, தங்களின் நலன் கருதி ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு வருகிறார்கள். இவற்றை பின்பற்றுவதற்கு நாங்கள் அரசியல் குழந்தைகளல்ல.

ஐக்கிய இடதுசாரி முன்னணியின் பொதுத் திட்டத்தின்மீது மட்டுமே சுதந்திரக் கட்சி, யூ. என். பி. போன்ற முதலாளித்துவ கட்சிகளை தோற்கடிக்க முடியும். இந்த முடிவை அடைவதற்காக, நாங்கள் போராடுவோம். வேண்டுமானால் உயிரை பணயம் வைத்து ஆயுதப் போராட்டம் செய்யவும் தயங்கமாட்டோம்.

---

## சிசுவைக் கொன்று தாய் தற்கொலை!

காங்கேசன்துறை, புதன்

கீரிமலையைச் சேர்ந்த பொன்னுச்சாமியின் மனைவி இராசலெட்சுமி தனது 5 மாதக் குழந்தைக்கு நஞ்சு கொடுத்து கொன்றுவிட்டு தானும் அதே நஞ்சுத் திராவகத்தை அருந்தி தற்கொலை செய்துகொண்டார்.

இவர்களின் மரணம் சம்பந்தமான விசாரணைகள் காங்கேசன்துறை அரசினர் ஆஸ்பத்திரியில் நடைபெற்றன. திடீர் மரணவிசாரணை அதிகாரி யோசேப், காங்கேசன்துறைப் பொலிசைச் சேர்ந்த ஜக்சன்சில்வா, மாவட்ட வைத்திய உதவி அதிகாரி ஆகியோர் நடத்திய விசாரணையில் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

---

## வடபகுதி மீனுக்கு விலை குறைவு

### எம். பி. புகார்

கல்லூர், வியாழன்

வடபகுதியில் பிடிக்கப்பட்டு கொழும்பு கொண்டு செல்லப்படும் மீன்களுக்கு சரியான விலை கிடைப்பதில்லை என்று பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம் மீன்பிடி இலாகாவிடம் தெரிவித்திருக்கிறார்.

கொழும்பு, கண்டி ஆகிய இடங்களில் யாழ்ப்பாண மீன்களுக்கு மிகக்குறைந்த விலையை கொடுப்பதாக மீன்பிடியாளர்கள் பருத்தித்துறை எம். பி. யிடம் புகார் செய்துள்ளனர். இதனைத் தொடர்ந்து திரு. துரைரத்தினம் மீன்பிடி இலாகா அதிபரைச் சந்தித்து இது சம்பந்தமாகப் பேசினார். பின் தொழில் அமைச்சருடனும் திரு. துரைரத்தினம் பேச்சு நடத்தியதாகத் தெரிகிறது.

திரு. துரைரத்தினத்திடம் மீன்பிடி இலாகா அதிகாரிகள் யாழ்ப்பாண மீன்களுக்கு கூடிய விலை கிடைக்க வேண்டுமானால் கொழும்பு, கண்டி ஆகிய இடங்களில் வியாபார நிலையங்களைத் திறக்கும்படி தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து யாழ்ப்பாண மீன்களுக்கு கொழும்பிலும் ஏனைய இடங்களிலும் பிற இடத்து மீன்களுக்கு கிடைக்கக் கூடியதாக வியாபார நிலையங்களை நிறுவ முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இலங்கையின் மீன்பிடித் தொழிலில் பதினைந்து விகித மீன்கள் யாழ்ப்பாணத்தில் பிடிக்கப்படுகின்றன. இம்மாதத்தில் மீன்கள் ஏராளமாகப் பிடிக்கப்படுகின்றன.

---

## ஞானபாஸ்கரோதய சங்க ஆண்டு விழா

யாழ்ப்பாணம், வியாழன்

கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சங்கத்தின் 44(வது) ஆண்டு விழாவும் ஞானபாஸ்கரோதய மங்கையர்கழகத்தின் 14-வது ஆண்டு விழாவும் ஞானபாஸ்கரோதய சனசமூக நிலையத்தின் 13-வது ஆண்டு விழாவும் எதிர்வரும் சனிக்கிழமை ஞானபாஸ்கரோதய வாசிகசாலை மண்டபத்தில் நடைபெறும்.

திரு. கே. வி. எஸ். சண்முகநாதன் தலைமையில் நடைபெறும் மேற்படி விழாக்களில் அரசாங்க எழுதுவினைஞர் சங்கத் தலைவர் திரு. செ. கோடீஸ்வரன், பண்டிதர் ச. இராமச்சந்திரன், திரு. கே. பி. முத்தையா, உட்படப் பலர் சொற்பொழிவாற்றுவார்கள்.

அன்று காலை 7மணியளவில் 10 மைல் நீள சைக்கிள் ஓட்டப் போட்டியொன்றும் வேறு நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

மறைந்த தலைவரின் உருவப் படத் திரைநீக்கமும் விழாவில் இடம்பெறும்.

---

## திருமண அழைப்பு

திரு. அ. இரத்தினசபாபதி அவர்களின் புதல்வன் திருநிறை செல்வன் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்திக்கும் (R. S. K. மூர்த்தி) முகாந்திரம் S. P. இராசநாயகம் அவர்களின் புத்திரி திருநிறை செல்வி இந்திராணிக்கும் நிகழும் குரோதி வருடம் சித்திரை மாதம் 21-ம் திகதி (3-5-64) ஞாயிற்றுக்கிழமை காலை 8-50 முதல் 10-25வரை உள்ள சுபமுகூர்த்தத்தில் கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் மண்டபத்தில் (புதுக்கோவில்) திருமணம் நிகழும். அத்தருணமும் அன்று மாலை 5 மணிக்கு மணமகன் இல்லத்தில் நடைபெறும் வரவேற்பு உபசாரத்திலும் சமூகந்தந்து மணமக்களை ஆசீர்வதித்து ஏகுமாறு நண்பர் உறவினர்களை அன்புடன் வேண்டிக் கொள்ளுகின்றோம்.

இங்ஙனம்,

S. தாமோதரம்பிள்ளையும் பாரியாரும்.

நிர். 81, கே. கே. எஸ். வீதி, கொக்குவில்.

276

---

## கார்விபத்து வழக்கு: இன்று விசாரணை

யாழ்ப்பாணம், புதன்

கவலையீனமாகக் காரைச் செலுத்தியதால் மரணத்தை ஏற்படுத்தியதாகக் குற்றஞ் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு நாளைக் காலை சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி திரு. எம். எம். அப்துல் காதர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

இவ்வழக்கில் 1963 ம் ஆண்டு ஏப்ரல் 6 ம் தேதி பளை பகுதியிலுள்ள வண்ணான்கேணி என்ற இடத்தில், தம்பையா குருநாதபிள்ளை என்பவர் கவலையீனமாகக் காரைச் செலுத்தி கணபதி சின்னப்பொடியனின் மரணத்தை ஏற்படுத்தியதாக குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிசார்பில் வழக்கறிஞர் திரு ஏ. எச். சி. டீ. சில்வா கியூ. சி., திரு ரி. கணேசலிங்கத்தில் உதவியுடனும், திரு. வி. செல்லத்துரையின் அனுசரணையுடனும் ஆஜராவார். முடிக்குரிய தரப்பில திரு வீ. கனகசபை வழக்கை நடத்துவார்.

---

## “மூன்று வழிகள் உள்ளன”

### — நாகநாதன்

கொழும்பு, புதன்

கோடீஸ்வரன் வழக்கில் நீதியரசர் திரு கிறெஸ்டர் வழங்கிய தீர்ப்பை வரவேற்றுக் குறிப்பிடுகையில் அரசாங்கத்துக்கு இப்பொழுது 3 வழிகள் உள்ளன் என்று நல்லூர் எம். பி. திரு. ஈ. எம். வி. நாகநாதன் தெரிவித்தார்.

(1). நீதியரசரின் தீர்ப்பை ஏற்று மொழிப்பிரச்னை சம்பந்தமாக சர்வகட்சித் தலைவர்களைக் கூட்டித்தீர்வு காணுதல்;

(2). தீர்ப்பை எதிர்த்து வாதாடல்;

(3). இந்த நல்ல சந்தர்ப்பத்தை விட்டுவிட்டு நாட்டில் மனக்கசப்பை மேலும் வளர்த்தல் ஆகிய 3 வழிகளே திரு. நாகநாதன் குறிப்பிட்டவையாகும்.

---

## இந்துசமய சங்க ஆண்டு விழா

யாழ்ப்பாணம். வியாழன்

கொட்டடி இந்து சமய விருத்திச் சங்க ஆண்டுவிழா வெள்ளிக்கிழமை கொட்டடி நமசிவாய வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

சுவாமிசச்சிதானந்தயோகீஸ்வரர் தலைமையில் நடைபெறும். இந்த விழாவில் பல அறிஞர்கள் உரை நிகழ்த்தவிருக்கிறார்கள் என அறிவிக்கப்படுகிறது.

---

## கி. ச. அங்கத்தவர் பதவி இழப்பு

நல்லூர், வியாழன்

புலோலி கிராமசபை முதலாம் வட்டார அங்கத்தவர் திரு. மூத்ததம்பி தம்பிராசா தமது அங்கத்துவ பதவியை இழந்துள்ளார்.

1-ம் வட்டார அங்கத்தவர் திரு. மூத்ததம்பி தம்பிராசா அவருடைய தெரிவின் பின்னர் சங்கத்திற்கு அறிவிக்காமல் 3 கூட்டங்களுக்குச் செல்லாமையால் அவர் பதவியை விட்டு விலகியுள்ளதாக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். சி. மாணிக்கவாசகர் அறிவித்திருக்கிறார்.

---

## கூட்டுறவுஇயக்கத்தின் வெற்றி

கொழும்பு. புதன்

இலங்கை கூட்டுறவு இயக்கத்தின் 1961-62 ம் வருடத்துக்கான அறிக்கையில் இக்கால எல்லையுள் 14,448 கூட்டுறவு சபைகள் ஸ்தாபனத்தில் பதிவு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விவசாய கூட்டுறவு யூனியன் ரூ. 22,000 மொத்த லாபமாகப் பெற்றதாகவும் 62 ம் வருடத்தில் மாலைதீவுக்கு பாக்கு ஏற்றுமதி செய்யதொடங்கியதாகவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

கொழும்பு, புதன்

ஜப்பானிய தேசிய தினத்தை முன்னிட்டு பிரதமர் ஸ்ரீமதி பண்டாரநாயகா, ஜப்பானியப் பிரதமருக்கு வாழ்த்துச் செய்தி ஒன்றை அனுப்பியிருக்கிறார்.

---

## ஸீராலியோன் பிரதமர் காலமானார்

பிரீடவுன், ஏப்ரல் 29

ஸிராலியோன் பிரதம மந்திரி சர் மில்டன் மார்கான் காலமானார் என அறிவிக்கப்படுகிறது. 68 வயதான இவர் சிறிது காலம் சுகவீனமுற்றிருந்தார்.

---

## திருடப்பட்ட சீனி மூடைகள் கண்டுபிடிக்கப்பட்டன

கொழும்பு, புதன்

கொழும்பு துறைமுகத்திலிருந்து திருடப்பட்டதாகச் சொல்லப்பட்ட அறுபது சீனி மூடைகளை புறக்கோட்டை பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

புறக்கோட்டைப் பொலிசைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர்கள் ரஹீம், கோர்டன் ஆகிய இருவரும் நேற்று மட்டக்குளிய என்ற இடத்திலுள்ள ஒரு வீட்டை திடீர் பரிசோதனை செய்தபொழுது சீனி மூடைகள் கண்டுபிடிக்கப்பட்டன.

---

## புத்தூர் கி. ச. தேர்தல் முடிவுகள்

யாழ்ப்பாணம், வியாழன்

நேற்று நடைபெற்ற புத்தூர் கிராமசபைத் தேர்தல் முடிவுகள் வருமாறு:-

2-ம் வட்டாரம்: கே. பத்மநாதன், 4-ம் வட்டாரம்: ந பாலகிருஷ்ணன், 5-ம் வட்டாரம், கே. சின்னத்துரை, 6-ம் வட்டாரம்: எஸ். கதிரவேலு, 7-ம் வட்டாரம்: மூ. திருநாவுக்கரசு.

மற்ற 5 வட்டாரங்களிலும் அங்கத்தவர்கள் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டது தெரிந்ததே.

---

## எண்ணெய் கம்பெனிக்கு நஷ்டஈடு

### முற்பணமாக செலுத்த அரசாங்கம் முடிவு

கொழும்பு, புதன்

ஷெல், எஸ்ஸோ, காலடெக்ஸ் ஆகிய எண்ணெய்க் கம்பெனிகளுக்கு செலுத்தவேண்டிய நஷ்டஈட்டுப் பணத்தில் ஒரு பகுதியை முற்பணமாகச் செலுத்துவதென்று நேற்று அரசாங்கம் தீர்மானித்தது. இத்தப்பணம் மேற்படி கம்பெனிகளிலிருந்து ஆட்குறைப்பு செய்யப்பட்ட ஊழியர்களுக்கு வழங்கப்படும் எனத் தெரிகிறது.

பெட்ரோலியம் கூட்டுஸ்தாபன திருத்த மசோதாவினால் இந்த ஆண்டுத் தொடக்கத்திலிருந்து மேற்குறித்த மூன்று எண்ணெய்க் கம்பெனிகளும் தமது பிரதான வியாபாரத்தை நடாத்த முடியாதிருப்பதால் நஷ்டஈடாக தமது ஊழியருக்குப் பணம் செலுத்தப் போதிய பணம் அவர்களிடமில்லை.

---

## “கறுப்பர்களின் பொறுமைமுடிகிறது”

### தென்னாபிரிக்கா பற்றி திருச்சபைத் தலைவர்

லண்டன், ஏப். 29

தென்னாபிரிக்காவிலுள்ள கறுப்பர்களின் பொறுமை விரைவாக முடிவுக்குவந்து கொண்டிருக்கிறதை முன்னாள் கேப்டவுன் ஆங்கிலிகன் ஆர்ச்பிஷப்டாக்டர்ஜூஸ்ட் டிபிளேங்க் கூறினார்.

நிற ஒதுக்கல் கொள்கைக்கு முடிவுகட்டவேண்டுமென அவர்கள் உறுதி கொண்டுவிட்டனர் என்றும் பி பி. ஸி. ஒலிபரப்பு நிகழ்ச்சி ஒன்றில் அவர் கூறினார்.

உலக வர்த்தக பகிஷ்காரம் தென்னாபிரிக்காவைப் பாதிக்குமென தாம் கருதவில்லையென்றும், இதற்கான மாற்று ஏற்பாடுகளுடன் இன ஒதுக்கலை உறுதியுடன் பின்பற்ற வெள்ளைக்காரர்கள் ஆயத்தமாக இருக்கிறார்களென்றும் அவர் கூறினார்.

விஷயம் முற்றிப் போவதைத் தடுக்கவேண்டுமானால் இதர வழிகளைக் கையாள வேண்டுமென்றும் அவர் கூறினார்.

---

## நாடெங்கும் நடைபெறும் மேதின விழாக்கள்

கொழும்பு, புதன்

கொழும்பில் ஐந்து மேதின விழாக்களும் பிறமாகாணங்களில் பல விழாக்களுமாக இந்த வாரத்தில் ஏராளமான மேதின விழாக்கள் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி சுதந்திர சதுக்கத்திலும், யூ. என். பி. கட்சி ஹைட் பார்க்கிலும் மேதின விழாக்கள் கொண்டாடும்.

இலங்கை வர்த்தக யூனியன் காலையில் அரசினர் எழுதுவினைஞர் சங்கத் தலைமையகத்திலும் இலங்கை வர்த்தக சம்மேளனம் சீனாவை ஆதரிக்கும் கோஷ்டியுடன் டி. மெல் பூங்காவில் மாலையிலும் மேதின விழாக்களைக் கொண்டாடும். இடதுசாரி ஐக்கியமுன்னணி யாழ்ப்பாணம், திருக்கோணமலை, அநுராதபுரம், அம்பாறை ஆகிய இடங்களில் மேதின விழா நிகழ்த்துமெனத் தெரியவருகிறது.

---

## 2 பாகிஸ்தானியர் கொல்லப்பட்டனர்

புதுடில்லி, ஏப். 29

கடந்த ஞாயிற்றுக்கிழமை காஷ்மீர் யுத்த நிறுத்த எல்லைக்கோட்டை 9 ஆயுதம் தாங்கிய பாகிஸ்தானியர் தாண்ட முயன்றபோது, அவர்கள் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்யப்பட்டதால் இரு பாகிஸ்தானியர் கொல்லப்பட்டனர்.

பூஞ்சுக்கு மேற்கே சில மைல் தூரத்தில் இச்சம்பவம் நடைபெற்றதாக பாதுகாப்பு அமைச்சு அதிகாரியொருவர் கூறினார். மிகுதிப்பேர் ... வழியே தப்பியோடிவிட்டனர்.

யுத்தநிறுத்த எல்லைக்கோடு மீறப்பட்டது குறித்து இந்தியா ஐ. நா. பார்வையாளர்களிடம் ஆட்சேபனை தெரிவித்துக்கொண்டிருக்கிறது.

---

## ‘சீனாவின் உதவியி... பிரச்னை தீராது’

### —பிரா...

பாரிஸ், ஏப்ர...

சீனாவின் உதவியின்றி ...ம் பிரச்னையைத் தீர்க்... யாது என்ற கருத்தை, ... 90 ஆண்டு அநுபவத்தின... 7 ஆண்டு யுத்தத்திலும் பிரான்ஸ் கொண்டிருக்கிறது என அந்நாட்டு வெளிநாட்டு மந்திரி கூறினார்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.